**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 01 – ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**இடைமனு எண்.1/2023–ல் நிறேவற்றுமனு எண்.29/2021–ல்**
**அசல் வழக்கு எண். 161/2015**

பன்னீர்செல்வம்
Rep by கணேசன் .....மனுதாரர்/மனுதாரர்/வாதி

...எதிராக...

1. மணி
2. தங்கம்
3. மாணிக்கம்
4. முத்துலெட்சுமி
5. ரெத்தினம்
6. சார்பதிவாளர்
   செம்பனார்கோயில்
7. தமிழ்நாடு அரசு சார்பாக
   அதன் மாவட்ட ஆட்சியர்
   நாகப்பட்டினம்
8. சபாநாயகம் ....எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.02.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்களும், 1 முதல் 8 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு E.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## உத்தரவு

மனுதாரர்/வாதி, 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு செலுத்தவேண்டிய கிரயத் தொகையான ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்)-ஐ மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச பிரிவு 151ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் மேற்படி நம்பரில் மனுதாரர்/மனுதாரர்/வாதி ஆவார். 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள், மனுதாரருக்கு மனு சொத்தை கிரயம் எழுதி பதிவு செய்து தர வேண்டும் என நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை வாதி தன் பெயரில் 1 முதல் 5 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் வாங்கிக் கொள்ள சம்மதிக்கிறார் என்றும், அதன்படி கிரயம் நிச்சயித்த கொண்ட தொகை ரூ.50,000/- ஆகும். மேற்படி ரூ.50,000/-ஐ வாதி 09.12.2018 தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் 1 முதல் 5 பிரதிவாதிகள் வசம் கொடுத்து சொத்தை கிரயம் செய்துகொள்ள எவ்வித ஆட்சேபனையும் செய்யாமல் கொடுக்க சம்மதிக்கிறார்கள். இதற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் ஒத்துக்கொள்கிறார்கள். சொத்துக்களில் அசல் பத்திரங்களை தர 1 முதல் 5 பிரதிவாதிகள் சம்மதிக்கிறார்கள் என்று வழக்கில் 09.12.2018-ல் லோக் அதாலத்தில் அவாடு ஆகியுள்ளது.

(ii) லோக் அதாலத் அவாடு படி மனுதாரர் 01.03.2019-ல் 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் கிரயத் தொகை ரூ.50,000/- ஐ கொடுத்து கிரயம் பதிவு செய்து தர கேட்டுள்ளார். அதற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் மனு சொத்துக்களின் அசல் பத்திரத்தை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டு அதன் பிறகு சொத்தை பதிவு செய்து கொடுப்பதாக கூறி கிரயத்தொகை ரூ.50,000/-ஐ 1 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி கொடுத்துவிட்டார்கள்.

மனுதாரரின் தாய்மாமன் தான் 1–ம் எதிர்மனுதாரர் ஆவார். மனுதாரரின் தாய் மாமன் மகள்கள் தான் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள்.

(iii) மனுசொத்தை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு கிரயம் எழுதி பதிவு செய்து தர வேண்டுமென நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனு தாக்கல் செய்தபோது மனுதாரர் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு தரவேண்டிய கிரயத் தொகை ரூ.50,000/– ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய Lodgement Schedule தயார் செய்து தரவேண்டுமென மனுதாரர் Lodgement Schedule 08.10.2021 அன்று தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் 20.10.2021-ல் அனுமதி மனுவுடன் Lodgement Schedule ஐ தாக்கல் செய்ய வேண்டும் என ரிட்டன் செய்யப்பட்டது.

(iv) அதன்பிறகு மனுதாரருக்கு இருதயத்தில் அடைப்பு ஏற்பட்டது. அதனால் நவம்பர் 2021 முதல் மனுதாரரால் வெளியில் எங்கும் செல்ல இயலவில்லை. 2022 -ல் திருச்சி காவேரி மருத்துவமனையில் மனுதாரருக்கு பைபாஸ் ஆபரேஷன் நடைபெற்றுள்ளது. இதனால் மனுதாரரால் உடனடியாக கிரயத் தொகையான ரூ.50,000/-ஐ டெபாசிட் செய்ய அனுமதி அளிக்க மனு தாக்கல் செய்ய இயலவில்லை. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. எனவே மனுதாரர்/வாதி, 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு செலுத்தவேண்டிய கிரயத் தொகையான ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்)–ஐ மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய அனுமதிகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

(i) மனு சரியல்ல. மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலை நிற்க கூடியதல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் சரியல்ல. இந்த மனுவில் வியாகதமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அம்சங்களைத் தவிர மற்ற அனைத்து அம்சங்களையும் இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். அசல் வழக்கில்

தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை வாதி தன் பெயரில் 1 முதல் 5 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் வாங்கிகொள்ள சம்மதிக்கிறார் என்றும், அதன்படி கிரயம் நிச்சயித்துக்கொண்ட தொகை ரூ.50,000 –ஐ வாதி 09.12.2018 தேதியிலிருந்து 09.03.2019 ஆக 3 மாதங்களுக்குள் 1 முதல் 5 பிரதிவாதிகள் வசம் கொடுத்து, சொத்தை கிரயம் செய்து கொள்ள எவ்வித ஆட்சேபனையும் செய்யாமல் கொடுக்க நீதிமன்றத்தில் 09.12.2018 லோக் அதாலத்தில் அவார்டு ஆகியுள்ளது உண்மை.

(ii) அவார்டு படி 01.03.2019 முதல் 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் கிரய தொகை ரூ.50,000 –ஐ கொடுத்து கிரயம் பதிவு செய்து தர கேட்டதாகவும் அதற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா மனு சொத்துக்களின் அசல் பத்திரத்தை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டு அதன் பிறகு சொத்தை பதிவு செய்து கொடுப்பதாக கூறி கிரயத் தொகையை 1 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பிக்கொடுத்துவிட்டார் என்பது சரியல்ல.

(iii) மனுசொத்தை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு கிரயம் எழுதி பதிவு செய்து தர வேண்டுமென நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதாகவும், நிறைவேற்று மனு தாக்கல் செய்தபோது மனுதாரர் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு தரவேண்டிய கிரயத் தொகை ரூ.50,000/– ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய Lodgement Schedule தயார் செய்து தரவேண்டுமென மனுதாரர் Lodgement Schedule 08.10.2021 அன்று தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றம் 20.10.2021-ல் அனுமதி மனுவுடன் Lodgement Schedule ஐ தாக்கல் செய்ய வேண்டும் என ரிட்டன் செய்யப்பட்டதாகவும் கூறுவதை எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார்.

(iv) 2022-ல் திருச்சி காவேரி மருத்துவமனையில் மனுதாரருக்கு பைபாஸ் ஆபரேஷன் நடைபெற்றதாகவும் அதனால் மனுதாரர் வெளியில் செல்லவில்லை என்று கூறுவதற்கும் மனுவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அவார்டு படி 3 மாதத்திற்குள் அவார்டு தொகையை மனுதாரர் எதிமனுதாரர் வசமோ அல்லது

நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யாமல் இருப்பதால் மேற்படி Award படி காலம் தாழ்த்தி தொகையை மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய முடியாது. மனு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது. உத்தரவுப்படி மனுதாரர் தொகையை டெபாசிட் செய்யாமல் வேண்டுமென்றே 3 வருடங்கள் கழித்து தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?</u>**

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாருக்கும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுகிடையே அசல் வழக்கு எண்.161/2015 தாக்கல் செய்யப்பட்டு தரப்பினர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டு அதன்படி கடந்த 08.12.2018–ல் நடைபெற்ற மக்கள் நீதிமன்றதின் மூலம் சமரச தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி 08.12.2018–ம் தேதிய மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தனது எதிர்வழக்குரையின் மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

(ii) மனுதாரர் தரப்பில் 08.12.2018–ம் தேதிய மக்கள் நீதிமன்ற தீர்ப்பில் விதிக்கப்பட்ட காலகெடுவிற்குள் கிரய தொகை செலுத்த இயலவில்லை எனவும், அதன் பின்னிட்டு மனுதாரரரால் செலுத்தப்பட்ட கிரய தொகை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொள்ளாமல் காலம் தாழ்த்தியதாகவும் எனவே நீதிமன்றத்தின் மூலம் கிரயம் ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள நிறைவேற்று மனு

தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர் வைப்பீடு செய்ய தயாராக உள்ள கிரய தொகையை ரூ.50,000/– ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய அனுமதி கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) எதிர்மனுதாரர் தரப்பில் 08.12.2018–ம் தேதிய மக்கள் நீதிமன்ற தீர்ப்பை ஒப்புக்கொள்ளப்பட்டும் குறித்த காலத்தில் கிரய தொகையை மனுதாரர் செலுத்த தவறியுள்ளதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்க தக்கதல்ல எனவும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iv) மனுதாரருக்கும் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கிடையே அசல் வழக்கு எண்.161/2015 நடைபெற்று அதில் ஏற்பட்ட சமரசப்படி கடந்த 08.12.2018–ல் மக்கள் நீதிமன்றத்தின் மூலமாக மனுதாரருக்கும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுகிடையே சமரச தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் அதன்படி மனுதாரர் மூன்று மாதத்திற்குள் கிரய தொகை ரூ.50,000/–ஐ 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு செலுத்தி கிரயம் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதில் தரப்பினர்களுக்கிடையே எவ்வித முரண்பாடும் இல்லை.

(v) மனுதாரர் தரப்பில் உடல்நிலை சரியில்லா காரணத்தினால் குறித்த காலத்தில் கிரய தொகை செலுத்தி கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள இயலவில்லை எனவும், மனுதாரரின் கோரிக்கைக்கு ஆதரவாக மனுதாரர் திருச்சி காவேரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான Discharge summary மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.3–ஐ பரிசீலிக்கையில் மனுதாரருக்கு இதயம் சம்மந்தமாக சிகிச்சை எடுத்துக்கொண்டது தெரியவருகிறது. இருப்பினும் மனுதாரர் கோரியவாறு கிரய தொகை ரூ.50,000/–ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துகொள்ள அனுமதிப்பதினால் எதிர்மனுதார்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதால் மனுதாரின் மனு அனுமதிக்க தக்கது என முடிவு காணப்பட்டு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 1–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**
**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** – இல்லை –
**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.12.2018 | மக்கள் நீதிமன்ற தீர்ப்பின் அசல் |
| ம.சா.ஆ.2 | - | Logdment settled அசல் |
| ம.சா.ஆ.3 | 07.11.2022 | Discharge Summary அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்** – இல்லை –
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை –

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.1/2023–ல்
நிறைவேற்று மனு எண்.29/2021–ல்
அசல் வழக்கு எண். 161/2015
நாள்.01.03.2024.